## அடுத்த 3 ஆண்டுகளில் அதிகரித்து வரும்

# மின்தேவையை பூர்த்தி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் டி.எம். கதிர்ஆனந்த் கேள்வி !



புதுடெல்லி, ஆக. 2-
தமிழ்நாட்டின் மின் உற்பத்தித் திறன் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம்கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்

அடுத்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் மின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், தெற்கு மின் இணைப்பு வழியாக மின் உற்பத்தி திறன் மற்றும் மின் பகிர்வு சுமை ஓட்டத்தை அதிகரிக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?

தமிழ்நாட்டில் மின் உற்பத்தி திறனின் தற்போதைய நிலை மற்றும் அடுத்த மூன்று ஆண்டுகளில் அதன் மின் உற்பத்தி திறனில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு குறித்து விவரம் தருக?

குறிப்பாக தமிழ்நாட்டில் மின் உற்பத்தியில் புதிய தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கவும், இடமளிக்கவும் ஒன்றிய அரசு போதுமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

இதற்கு ஒன்றிய அரசின் மின்சார அமைச்சர் மனோகர் லால் எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறன் 43,107 மெகாவாட் ஆகும். அடுத்த மூன்று ஆண்டுகளில் மாநிலத்தில் மின் உற்பத்தித் திறனை அதிகரிக்க பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

(I) மாநிலத் துறையில் 3,440 மெகாவாட் வெப்பத் திறனும் 500 மெகாவாட் சேமிப்புத் திறனும் அடுத்த மூன்று ஆண்டுகளில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(II) அடுத்த மூன்று ஆண்டுகளில் இயக்க திட்டமிடப்பட்டுள்ள அணுசக்தித் திட்டங்களிலிருந்து தமிழ்நாடு சுமார் 2,151.8 மெகாவாட் பங்கை தமிழ் நாடு பெறும்.

(III) அடுத்த மூன்று ஆண்டுகளில் மாநிலத்தில் சுமார் 6,000 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க மின்சாரம் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(IV) பிரதான் மந்திரி கிசான் உர்ஜா சுரக்ஷா ஏவம் உத்தான் மகாபியான் (PMKUSUM), PM சூர்யா கர் முஃப்த் பிஜிலி யோஜனா, கடல் காற்று மின் திட்டங்களுக்கான செயல்திறன் இடைவெளி நிதி (VGF) திட்டம் போன்ற திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

765 kV மற்றும் 400 kV கூடுதல் உயர் மின்னழுத்த (EHV) AC இணைப்புகள் மற்றும் +/800 kV உயர் மின்னழுத்த (HV) DC அமைப்பு ஆகியவற்றைக் கொண்ட உயர் திறன் கொண்ட மின்மாற்ற வழித்தடங்கள் மூலம் தமிழ்நாடு தேசிய மின்மயமாக்கலுடன் நன்கு இணைக்கப்பட்டுள்ளது, இது தமிழ்நாடு மற்றும் பிற தென் பிராந்திய மாநிலங்கள் / தேசிய மின்கட்டமைப்பு இடையே மாநிலங்களுக்கு இடையேயான மின்மாற்ற அமைப்பு (ISTS) நெட்வொர்க் மூலம் சீரான மின்சார பரிமாற்றத்தை எளிதாக்குகிறது.

பல்வேறு பிராந்தியங்களுக்கு இடையேயான இணைப்புகள் அதாவது. நரேந்திர (SR) புனே (WR) 765 kV D/c பாதை, அங்குல் (ER) ஸ்ரீகாகுளம் (SR) 765 kV 2வது D/c பாதை மற்றும் பிதார் (SR) பர்லி (WR) 765 kV D/c பாதை ஆகியவை செயல்படுத்தலின் வெவ்வேறு கட்டங்களில் உள்ளன. இந்த இடை பிராந்திய இணைப்புகள் தெற்கு பிராந்தியத்தின் உச்ச தேவை காலத்தில் தமிழ்நாடு உட்பட தெற்கு பிராந்தியத்தின் இறக்குமதி தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உதவுகின்றன. இந்த இணைப்புகள் தெற்கு பிராந்தியத்திலிருந்து உபரி மின்சாரத்தை ஏற்றுமதி செய்வதற்கும் உதவும்.

(c): மின்சாரச் சட்டம் 2003 இன் படி, மின்சாரம் உற்பத்தி என்பது உரிமம் பெறத் தேவையற்ற (உரிமம் இல்லா) செயலாகும்.

தமிழ்நாடு உட்பட நாட்டில் மின் உற்பத்தியில், குறிப்பாக புதுப்பிக்கத்தக்க துறையில் தனியார் நிறுவனங்களின் முதலீட்டை ஊக்குவிக்க இந்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இவற்றில், பிறவற்றுடன், பின்வருவன அடங்கும்:

கடல் காற்றாலை மின் திட்டங்களை செயல்படுத்துவதற்காக, 1 GW கடல் காற்றாலை மின் திட்டங்களை நிறுவுவதற்காக, மொத்தம் ரூ. 7,453 கோடி செலவில், செயல்திறன் இடைவெளி நிதி (VGF) திட்டத்தை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது, இதில் 500 MW தமிழக கடற்கரையில் நிறுவப்பட உள்ளது.

மேலும், மாநிலத்தில் மின் உற்பத்தியில் தனியார் துறையின் பங்களிப்பை ஊக்குவிக்க தமிழ்நாடு அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

(I) தனியார் டெவலப்பர்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில், மின்சக்தி சேமிப்பு திட்டங்கள் மற்றும் சிறிய நீர் மின் திட்டங்களை (100 KW முதல் 10 MW வரை) நிறுவுவதற்கான கொள்கைகள் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டுள்ளன.

(II) தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் மொத்தம் 13,500 மெகாவாட் திறன் கொண்ட மின்சக்தி சேமிப்புத் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன, மேலும் அவை பொது தனியார் கூட்டு முறையில் நிறுவப்பட உள்ளன.

(III) சுயமாக அடையாளம் காணப்பட்ட மின் சக்தி சேமிப்புத் திட்டங்கள் மற்றும் சிறிய நீர் மின் திட்டங்களின் மேம்பாட்டிற்காக, ஆர்வ வெளிப்பாடு மூலம் டெவலப்பர்கள் அடையாளம் காணப்பட்டு, ஒதுக்கீடு செயல்பாட்டில் உள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் தனதுபதிலில்கூறியுள்ளார்.

### தென்காசி ஒன்றியக் கழக முன்னாள் செயலாளர்

# ராஜாராம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.2-

தென்காசி ஒன்றியக் கழக முன்னாள் செயலாளர் ராஜாராம் அவர்களின் மறைவுக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தென்காசி ஒன்றியக் கழக முன்னாள் செயலாளரும், குற்றாலம் பேரூர் தி.மு.க. முன்னாள் செயலாளருமான ராஜாராம் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் கழக உடன்பிறப்புகளுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



177 வது வட்ட தி.மு.க. வேளச்சேரி மேற்கு பகுதி

## மற்ற மாநிலங்களில் உள்ள முதல்வர்கள் வியந்து பார்க்கும் அளவிற்கு தமிழ்நாடு

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பல்வேறு மக்கள் திட்டங்களை செய்து கொண்டிருக்கிறார்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேச்சு!

திருவள்ளூர், ஆக 2-
உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மக்களின் கோரிக்கைகளுக்கு ஒரே இடத்தில் தீர்வு அளிக்கும் இந்த திட்ட முகாமிற்கு ஏராளமான பொதுமக்கள் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்ட மன்ற தொகுதிகுட்பட்ட ஆவடி மாநகராட்சி திருமுல்லைவாயில் தனியார் மண்டபத்தில் மண்டலம் 2ஐ சேர்ந்த பொதுமக்களுக்காக முகாம் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் முகமினை தொடங்கி வைத்து ஆய்வு மேற்கொண்டார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வேண்டி பெண்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் ஏறக்குறைய 27000 பெண்கள் முகாமில் விண்ணப்பித்தனர்.

பொதுமக்கள் சேவைக்காக மாநகராட்சி நிர்வாகம், குடிநீர், வருவாய், மருத்துவம், எரிசக்தி, கூட்டுறவு, உணவு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர்,மிகப்பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர், சிறுபான்மை நலத்துறை, தொழிலாளர் நலன், வீட்டு வசதி, சிறுகுறு நடுத்தர தொழில் நிறுவனங்கள், சமூக நலன், மகளிர் உரிமைத் தொகை, தகவல் தொழில்நுட்பத் துறை, டிஜிட்டல் சேவை உள்ளிட்ட 13 அரசு துறைகள் மூலம் மனுக்கள் பெறப்பட்டு அதற்காக ஒப்புதலும் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் சாமு நாசர் அவர்கள் அன்றைய காலம் அசோக ராஜ்ஜியம் இராஜ ராஜ சோழன் ஆட்சியும் பொற்கால ஆட்சி என வரலாற்றில் உள்ளது அந்த வரிசையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஈன்றெடுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சி பொற்காலம் ஆட்சி மற்ற மாநிலங்களில் உள்ள முதலமைச்சர்கள் வியந்து பார்க்கும் பொறாமைப்படும் அளவிற்கு நாம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி அமைத்து எண்ணற்ற திட்டங்களை தீட்டி தமிழ்நாடு மக்களுக்கு அளித்து வருகிறார் என கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகர ஆணையர் சரண்யா, மாநகர பொறுப்பாளர் சண்பிரகாஷ், பகுதி கழக செயலாளர் வி.பேபி சேகர் கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மேயர் பிரியா – சொ.வேலு – பரிதி இளம்சுருதி பங்கேற்பு!

# எழும்பூர் தொகுதி 99வது வார்டு அடுக்குமாடி குடியிருப்பில் ஆய்வு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு மேற்கொண்டார்!

சென்னை, ஆக.2-
அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே சேகர்பாபு, எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டுக்கு உட்பட்ட ஆர். கே.புரம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பில் மக்கள் வைத்த கோரிக்கை அடிப்படையில் திருக்கோவில் கட்டுமான பணி குறித்து ஆய்வு மற்றும் ஓட்டேரி திடீர் நகர் பின்புறம் புதிதாக கட்டப்பட உள்ள அடுக்குமாடி குடியிருப்பு குறித்து துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

உடன் மேயர் திருமதி பிரியா ராஜன், எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு, கழக அயலக அணி மாநிலத் துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி, எழும்பூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மருத்துவர் யாழினி, வட்டக் கழகச் செயலாளர்கள் ஆர்.எம் ரங்கநாதன், சி. சேகர், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத் துறை அதிகாரிகள், மாநகராட்சி அதிகாரிகள், ஊர் பொதுமக்கள் உடன் இருந்தனர்.

## மதுரவாயல் 153 வது வட்டம் – போரூர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில்

# தொழில்நுட்ப வளர்ச்சி கட்டமைப்புகள்: காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

## வட்டச் செயலாளர் தி.சார்லஸ் – மாமன்ற உறுப்பினர் சாந்தி இராமலிங்கம் பங்கேற்பு!

சென்னை, ஆக. 02 -
சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, 153 வது வட்டத்திற்கு உட்பட்ட போரூர் அரசினர் ஆண்கள் மேல்நிலை பள்ளியில் 35 சி.சி.டி.வி. கண்காணிப்பு படப்பிடிப்பு கருவிகள் வகுப்பறைக்கு தேவையான மின்விசிறிகள், ஆழ்குழாய் தானியங்கி குடிநீர் குழாய், பள்ளி மேடை மறுசீரமைப்பு, வகுப்புகள் தோறும் ஒலி பெருக்கி வடிவமைப்புகள் போன்ற பல்வேறு செயல்பாடுகளை பயன்பாட்டிற்கு காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ. கொண்டுவந்தார்,

மேலும் இப்பள்ளிக்கு தேவையான கட்டமைப்புகளை வட்டக் கழக நிர்வாகிகளையும், தன்னார்வலர்களையும் ஒருங்கிணைத்து இப்பணிகள் சிறப்பாக நடைபெற சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இதில் வட்டக் கழகச் செயலாளர் தி.சார்லஸ், மாமன்ற உறுப்பினர் சாந்தி இராமலிங்கம், பால் பாண்டியன், க.நடராஜன், இராமலிங்கம், தினகரன், பால்ரவி, ஸ்டான்லி, விஜயா, ஏழுமலை, செல்ல முத்து, பாலாஜி, தினா (எ) தினேஷ், மோகன், உதயகுமார், சரத், சூர்யபிரகாஷ், காளீஸ்வரி, ரங்கா, பஷீர், கோபி, கிரிஸ்லர், பன்னீர், தென்னரசு, தூயவன், பார்த்திபன், கண்ணன், வேதகிரி, ராஜேந்திரன், ஷியாம், சுகுமார், நவீன், விக்கி, ஜான்சி, ராஜ கண்ணு, நாகராஜ், பூங்கொடி, தீபன், மகேஷ், முனுசாமி, பிரகாஷ், கிளாரா, சபரி, தனசேகர், செல்வம்பாணி, பிரபா, மனோகர், காளிதாஸ், ரவி, ஜனார்த்தனன், அழகர் செந்தில், ஜெயவீரன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## எழும்பூர் 99வது வட்ட பாகமுகவர் – மறைந்த

# பொ.தட்சிணாமூர்த்தி 16-ஆம் நாள் நினைவு - திருவுருவப் படம்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு திறந்து வைக்கிறார்!



சென்னை, ஆக.2-
சென்னை கிழக்கு மாவட்டம் -எழும்பூர் வடக்கு பகுதி 99வது வட்ட பாகமுகவர் (BLA2) - மறைந்த போ. தட்சிணாமூர்த்தி (வயது 52) 16ஆம் நாள் நினைவு அஞ்சலி மற்றும் படத் திறப்பு நிகழ்வு இன்று (02.08.2025-சனிக்கிழமை) இரவு 7 மணியளவில் 21, திடீர் நகர், புரசை வாக்கம், சென்னை - 07-ல் நடைபெறு கிறது.

இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சர் - தலைவர் பெருநகர சென்னை வளர்ச்சி குழுமம் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு திறந்து வைக்கிறார்.

இதில் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ. வேலு, 99-வது வட்ட செய லாளர் ஆர்.எம். ரங்கநாதன் மற்றும் கழகத்தினர் மற்றும் கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

இந்நிகழ்வில் மாவட்ட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் முன்னாள் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துமாறு வட்டச் செயலாளர் ஆர்.எம். ரங்கநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மீஞ்சூர் ஒன்றியத்தில் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழவேற்காடு கடல் கரை விளக்கம் முதல் காட்டுப்பள்ளி வரை புதிய தார் சாலை அமைக்கும் பணியை திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் துவக்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் உடன் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வெ.அன்புவாணன், ஒன்றிய செயலாளர் மு.முரளி தாரன், ஆ.ராஜா, பொதுக்குழு உறுப்பினர் பா.செ.குணசேகரன், முகமது அலவி, பா.து.தமிழரசன், ஜெயபால், கருணாகரன், அசோகன், கன்னிமுத்து, ரமேஷ், சுப்பிரமணி, தமிழன்ஷா, காசி, இயேசு ராஜன், பி.எல்.சி.ரவி, பழனி, நாராயணன் மற்றும் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உள்ளனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி விவசாய அணி நிர்வாகிகளாக தலைமைக் கழகத்தால் நியமனம் செய்யப்பட்ட மேற்குப் பகுதி அமைப்பாளர் பாலாஜி, துணை அமைப்பாளர்கள் ஜி.கணேஷ், எஸ்.ஜோயல், குணசேகரன் மற்றும் சைமன் ஆகியோர் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழகச் செயலாளர் வழக்கறிஞர் வை.மா.அருள்தாசன், முன்னிலையில் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ். சுதர்சனத்திடம் வாழ்த்துப் பெற்றனர்.